**சிவகாசி மாநகர்மன்றம்**
**சாதாரணக் கூட்டம்**

**மாநகராட்சி அலுவலகம்.**

**சாதாரணக் கூட்டம் எண் .** **நாள் 29.09.2023**

நிகழும் திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 12 ஆம் நாள் 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ம் தேதி வெள்ளி கிழமை பகல் 12.00 மணிக்கு நடைபெறும் மாநகர் மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை : திருமதி.இ.சங்கீதா,பி.ஏ.,**
**மாமன்ற தலைவர்.**

பொருள் :01

ஆணையாளரின் ஆகஸ்ட்-2023 மாதம் மற்றும் செப்டம்பர் மாதம் 29ம் நாள் வரை நாள்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- மாமன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.6779/2021/சி1

தீர்மான எண்: 955 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :02

சிவகாசி மாநகராட்சி 2022-2023ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மாமன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்-8506/2016/சி1

தீர்மான எண்: 956 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :03

தமிழக முதல்வரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் மூலம் இம்மாநகராட்சி எல்லைகுட்பட்ட 7 அரசு பள்ளியில் 1 முதல் 5 வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டுவருகிறது. மேலும் இத்திட்டத்தின் உணவிற்கு ஆகும் செலவீனத் தொகையினை அரசு மானியம் வரும் வரை 2023-2024 கல்வி நிதியில் செலவு செய்யவும், அரசு மானியம் பெற்றபின் கல்வி நிதியில் செலவு செய்யப்பட்டதை ஈடுசெய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதியின் படி மேல் நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்: 2417/2023/இ1

தீர்மான எண்: 957 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :04

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/2016/UPA2 நாள்.08.09.2018 மாநகராட்சிப் பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2018யை மாநகராட்சியின் மாமன்ற அனுமதி பெற்று செய்திதாளில் வெளியீடு செய்து அதில் பெறப்படும் ஆட்சேபணைகளுக்கு ஆலோசனை பெறப்பட்ட பின் அதன் அடிப்படையில் மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்யப்பட வேண்டும் எனவும் அதற்கு முன் பெறப்படும் ஆலோசணை மற்றும் ஆட்சேபனைகளின் அடிப்படையில் இறுதி மாநகர்மன்ற தீர்மானம் பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட துணை விதிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. மேற்கண்ட துணை விதிகளை ஏதேனும் தமிழ் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யவும், அதற்கான செலவு தொகைக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - 1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5487/2016/எப்1

தீர்மான எண்: 958 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :05

சிவகாசி மாநகராட்சிக்கு சொந்தமான சாத்தூர் சாலையில் புல எண். 76 ன் இடத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 19089/2021/மா.தி2 நாள்: 15.12.2022 ஆணையில் ( General Grand fund ) மூலதன மானிய நிதி 2021 - 2022 ன் கீழ் ரூ. 250 இலட்சம் மற்றும் முன் ஏல வைப்பு தொகை மூலம் (PPP Mode / Pre Auction) ரூ. 250 இலட்சம் சேர்த்து மொத்தம் மதிப்பீடு ரூ. 500 இலட்சத்தில் வணிக வளாக கடைகள் தரை தளத்தில் 46 கடைகளும், முதல் தளத்தில் 57 கடைகளும் ஆக மொத்தம் 103 கடைகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வணிக வளாக கடைகள் கட்டப்பட்டு வருகிறது, கடைகள் அதற்கான முன் ஏல வைப்பு தொகை பெறுவது சம்பந்தமாக, இந்நகர் பகுதியில் உள்ள அனைத்து சங்களின் பொறுப்பாளர்கள் முன்னிலையில் இம்மாமன்ற மேயர், இம்மாமன்ற துணை மேயர் , மண்டல குழு தலைவர்கள் மற்றும் ஆணையாளர் ஆகியோர்களின் தலைமையில் கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் 04.09.2023 ம் தேதியில் காலை 12.00 மணியளவிலும் மற்றும் மாநகர பகுதியில் உள்ள அனைத்து வங்கி மேலாளர்களிடமும் கலந்தாய்வு கூட்டம் 13.09.2023 ம் தேதியில் மாலை 04.00 அன்று சிவகாசி மாநகராட்சி அலுவலகத்தில் வைத்து இக்கடைகள் ஏலம் விடுவது மற்றும் வைப்பு தொகை பெறுவது தொடர்பாக அவர்களின் மேலான கருத்துகளை பகிர்ந்து கொள்ள கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

அக்கலந்தாய்வு கூட்டத்தில் இப்பொருள் தொடர்பான அனைத்து விளக்கங்களும் தெரிவிக்கப்பட்டது. இவ்வணிக வளாகத்தில் கட்டப்படும் 103 கடைகளுக்கும் தரத்திற்கு ஏற்றவாறு டெபாசிட் தொகை மற்றும் வாடகை உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் அவர்களால் நிர்ணயம் செய்து கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கடை விபரம் | கடைளின் எண்ணிக்கை | ஒரு கடைக்கு டெபாசிட் தொகை ரூ. | (PPP Mode / Pre Auction) Rs. (3 x 4) | அரசு மதிப்பீட்டின் படி ஒரு கடைக்கு மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 01 | தரை தளம் - எ | 46 | 2,65,000 | 1,21,90000 | 7100 |
| 02 | முதல் தளம்- பி | 57 | 2,25,000 | 1,28,25000 | 6400 |
| | மொத்தம் | 103 | | 2,50,15000 | |

பட்டியலில் உள்ள படி புதியதாக கட்டப்படும் வணிக வளாக கடைகளுக்கு டெபாசிட் மற்றும் வாடகை நிர்ணயத்து பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அறிக்கையில் பதிவு செய்ய மேல்நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மற்றும் நகர் பகுதியில் பொது மக்கள் கூடும் அனைத்து இடங்களில் நெகிழ் பலகை ( Flex board ) மூலமும் மாவட்ட அளவில் அனைத்து தினசரி நாளிதழ்களிலும் விளம்பரம் செய்வதற்கும் மற்றும் இதர செலவுகளுக்கும் அதற்கான செலவு தொகை ரூ. 3,00,000/- ( மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1832/2022/அ4)

தீர்மான எண்: 959 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :06

சிவகாசி மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜர் சாலை வணிக வளாகத்தில் உள்ள மாடி கடை எண். 02 ற்கு 22.08.2023 ம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஒப்பந்தப்பள்ளி ஏல கேள்வி தொகையில் யாரும் கலந்து கொள்ள வில்லை மற்றும் பொது ஏல கேள்வியில் கீழ்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டு தனித்தனியாக வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது .

| வ.எண் | ஏலதாரர் பெயர் | பொது ஏல கேள்வி தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 01 | எம். கருப்பசாமி ,<br>த/பெ.பி.முத்து ,<br>1/928, வடபட்டி கீழூர் ,<br>பூவநாதபுரம் (அஞ்சல்), சிவகாசி | 4,800 | ---- |
| 02 | எஸ். அந்தோனியம்மாள்,<br>க/பெ. எம். கருப்பசாமி ,<br>1/928, வடபட்டி கீழூர் ,<br>பூவநாதபுரம் (அஞ்சல்), சிவகாசி | 4,900 | ---- |

இக்கடையானது பலமுறை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏலம் போகததால் மேற்படி கடைகளுக்கான வைப்பு தொகை ரூ. 3,00,000/- மாக (மூன்று இலட்சம்) இருந்ததை மாமன்ற தீர்மான எண். 869 நாள். 31.05.2023 ன் படி ரூ.2,00,000/- என (இரண்டு இலட்சம் ) குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டது. பின்பு மேற்கண்ட கடைகளுக்கு 3 முறை ஏலம் கோரப்பட்டதில் , மேற்காணும் விபரப்படி இரண்டு நபர்களில் பொது ஏல கேள்வி தொகையில் உயர்ந்த பட்ச கேள்வி தொகையாக வ.எண். 02 ல் உள்ள ஏலதாரர் திருமதி. எஸ். அந்தோனியம்மாள் என்பவர் உயர்ந்த பட்ச பொது ஏல கேள்வி தொகையாக மாத வாடகை ரூ. 4,900/- ( GST தனியாக) (நான்காயிரத்து தொள்ளாயிரம் மட்டும் ) னை ஏற்று 01.09.2023 முதல் 31.08.2026 வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை இன பொது ஏலம் நிபந்தனைகளின் படி நடத்தி கொள்ளும் உரிமம் ஒப்படைப்பு செய்வதற்கு மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1832/2022/அ4)

தீர்மான எண்: 960 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :07

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் :12091/2023/எம்ஏ2 நாள்: 09.08.2023 தெரிவித்துள்ளவாறு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 தொடர்பான பயிலரங்கம் 22.06.2023 அன்று நடைப்பெற்றது. இப்பயிலரங்கத்திரல் மேடை அலங்காரம் , வரவேற்பு ஏற்பாடுகள் சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டமைக்கான தொகை மாநகராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே சிவகாசி மாநகராட்சிக்கான தொகை ரூ. 50,000/-யை (ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசரம் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை வழங்குவதற்க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :** 3552/15/பி2

தீர்மான எண்: 961 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :08

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான PYRETHRAM 2% EC 500 லிட்டர் கொள்முதல் செய்யும் பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண் 729, நாள்-31.03.2023-ல் அனுமதி அளித்துள்ளதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Vignesh Enterprises, | M.S.M.E Certificate | ரூ.6,63,750/- |

| | | | |
|---|---|---|---|
| | No.57, IInd Main Road, Nethaji Nagar, Chennai - 600 044 | Enclosed. EMD Exempted | |
| 2 | A To Z Enterprises, Plot 10 , S2, Balaji Nagar, Puzhudivakkam, Chennai - 600 091 | M.S.M.E Certificate Enclosed. EMD Exempted | ரூ.6,49,000/- |

அலுவலகக்குறிப்பு:-
1. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்- 2-ல் கண்ட A To Z Enterprises, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : 2081/2023/எச்1

தீர்மான எண்: 962 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :09

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான Bleaching Powder - 10 டன் கொள்முதல் செய்யும் பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண் 727, நாள்-31.03.2023-ல் அனுமதி அளித்துள்ளதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Vignesh Enterprises, No.57, IInd Main Road, Nethaji Nagar, Chennai - 600 044 | M.S.M.E Certificate Enclosed. EMD Exempted | ரூ.4,95,600/- |
| 2 | A To Z Enterprises, Plot 10 , S2, Balaji Nagar, Puzhudivakkam, Chennai - 600 091 | M.S.M.E Certificate Enclosed. EMD Exempted | ரூ.4,72,000/- |

அலுவலகக்குறிப்பு:-
1. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 2-ல் கண்ட A To Z Enterprises, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : 2251/2023/எச்1

தீர்மான எண்: 963 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :10

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு தூள் -40 டன் மற்றும் கருப்பு பினாயில் - 2000 லிட்டர் கொள்முதல் செய்யும் பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண் 726, நாள்-31.03.2023-ல் அனுமதி அளித்துள்ளதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு

நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Vignesh Enterprises, No.57, IInd Main Road, Nethaji Nagar, Chennai - 600 044 | M.S.M.E Certificate Enclosed. EMD Exempted | ரூ.6,96,200/- |
| 2 | A To Z Enterprises, Plot 10 , S2, Balaji Nagar, Puzhudivakkam, Chennai - 600 091 | M.S.M.E Certificate Enclosed. EMD Exempted | ரூ.6,72,600/- |

அலுவலகக்குறிப்பு:- 1. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 2-ல் கண்ட A To Z Enterprises, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : 2235/2023/எச்1

தீர்மான எண்: 964 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :11

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான TEMEPHOS 50% EC – 1000 லிட்டர் கொள்முதல் செய்யும் பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண் 728, நாள்-31.03.2023-ல் அனுமதி அளித்துள்ளதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Vignesh Enterprises, No.57, IInd Main Road, Nethaji Nagar, Chennai - 600 044 | M.S.M.E Certificate Enclosed. EMD Exempted | ரூ.7,43,400/- |
| 2 | A To Z Enterprises, Plot 10 , S2, Balaji Nagar, Puzhudivakkam, Chennai - 600 091 | M.S.M.E Certificate Enclosed. EMD Exempted | ரூ.7,37,500/- |

அலுவலகக்குறிப்பு:- 1. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 2-ல் கண்ட A To Z Enterprises, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : 2081/2023/எச்1

தீர்மான எண்: 965 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :12

சிவகாசி மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் அனைத்து வாகனங்களுக்கு 2023-2024 ஆண்டுக்கு சாலைவரி, பசுமை வரி மற்றும் இன்சூரன்ஸ் செலுத்துவதற்கும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)-ஐ பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 3806 /2014/ எச்2 )**

தீர்மான எண்: 966 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :13

சிவகாசி மாநகராட்சி பொது சுகாதார பிரிவு Mini JCB வாகனம் புதிதாக கொள்முதல் செய்யப்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட JCB வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு 1000 மணி நேரம் இயக்கப்பட்டு விட்டது. அதனால் மேற்கண்ட வாகனத்திற்கு Engine Oil, Disel Filter மற்றும் Cutter Kit போன்றவை கொள்முதல் செய்து பொருத்தி சர்வீஸ் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்திற்கு தேவைப்படும் Engine Oil, Disel Filter மற்றும் Cutter Kit

போன்றவை பொருத்தும் பணிக்கு ஆகும் செலவுத்தொகை ரூ.30,357/-(ரூபாய் முப்பது ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்து ஏழு மட்டும்)-ஐ பொது நிதியின் கீழ் செலவுகள் மேற்கொள்ளவும் மற்றும் மேற்படி பழுது பணிகளை அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/s.Jeyaraj Automobile Agency, Srivillipudur என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 6726/ 2023 / எச்2**

தீர்மான எண்: 967 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :14

சிவகாசி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மாநகராட்சி அலுவலக கட்டிடங்கள், மாநகராட்சி பள்ளிகள், மாநகராட்சி சத்துணவு மையங்கள் போன்ற இடங்களில் கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்யவும் மற்றும் மழைநீர் வடிகால்களில் ஏறுபடும் அடைப்புகளை சுத்தம் செய்வதற்காக மட்டுமே புதிதாக SULLAGE TANKER LORRY கழிவுநீர் வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி வாகனத்தினை இலவசமாக பயன்படுத்தி கொள்ள பல்வேறு அரசு அலுவலகங்களில் இருந்து கடிதங்கள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது. எனவே

வாகனத்தின் எரிபொருள், வாகன பராமரிப்பு, வாகன வரிகள் மற்றும் வாகன காப்பீடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு 1 லிட்டர் ஒன்றுக்கு 0.60 பைசா வீதம் 5000 லிட்டர் கொள்ளவு கொண்ட வாகனத்திற்கு நடை ஒன்றுக்கு ரூ.3000/- என விலை நிர்ணயம் செய்யவும் மற்றும் விளம்பரம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மாநகராட்சியின் நலன் கருதியும் மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு மேற்கண்ட பணிக்கு அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 3523/2023/எச்1

தீர்மான எண்: 968 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :15

சிவகாசி மாநகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் ஏனைய தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு இயக்குநர், பொது சுகாதாரத்துறை, சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக உத்திரவிற்கிணங்க இம்மாநகராட்சியில் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு 70 பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களுக்கு அரசாணை எண்.36, நாள்: 16.06.2023-ன் படி குறைந்தபட்ச தினக்கூலி அடிப்படையில் நான்கு மணி நேர பணிக்கு நாள் 1-க்கு ரூ.250/- வீதம் 30 நாட்களுக்கு 7500/- வீதம் E.P.F. 13 % தொகை ரூ.33/- சேர்த்து (250 + 33 = 283) நாள் 1-க்கு 283/- எனில் 30 நாட்களுக்கு ரூ.8490/-வீதம் 70 பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,94,300/- வீதம் 01.09.2023 முதல் 31.01.2024 வரை ஆகும் தோரய செலவுத் தொகை ரூ.30,00,000/-(ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) -க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. அரசாணை எண்.36, நாள்: 16.06.2023-ன் படி பணி செய்யும் பணியாளர்களுக்கு பணி நேர அடிப்படையில் உரிய சம்பளத்தொகை வழங்கலாம்.

2. டெங்கு நோய் தடுப்பு பணிகள் அத்தியாவசிய பணியாக உள்ளதாலும் மற்றும் ஏனைய தொற்று நோய் தடுப்புளுக்கு பொது சுகாதார அத்தியாவசிய அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்க வேண்டியுள்ளதால் ஆகும் செலவீனங்களுக்கு பொது நிதி வருவாய் செலவு மேற்கொள்ளமைக்கும் மற்றும் மாமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண் : 7263/2023 / எச்1 )**

தீர்மான எண்: 969 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :16

சிவகாசி மாநகராட்சி தெரு நாய் கருத்தடை அறுவை சிகிச்சை நல மையத்தினை 01.08.2023ம் தேதி மண்டல இணை இயக்குநர், விருதுநகர் மற்றும் AWBI - உறுப்பினர் டாக்டர்.ஜெயகிருஷ்ணன் ஆகியோர் ஆய்வு செய்ததில் கீழ்கண்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் கட்டிட பழுது மற்றும் மின்சார பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதன் படி கீழ்காணும் உபகரணங்கள் மற்றும் பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ.3.20 இலட்சம் மட்டும் இப்பணிக்கு ஆகும் செலவு தொகையினை 2023-2024 வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

1. கருத்தடை அறுவை சிகிச்சை மையத்திற்கு குளிரூட்டி பொருத்துதல்.
2. குளிர்சாதன பெட்டி வாங்கும் பணி.
3. Auto Clave Machine
4. Quarantine Kennel Room for Rahies Dog.
5. காத்தாடி -4 எண்ணம் பொறுத்தும் பணி

6. அறுவை சிகிச்சை படுக்கை -2 எண்ணம்
7. வர்ணம் பூச்சு பணி
8. மேல்நிலை தொட்டி பைப்லைன் பணி
9. மின்சார பணி மேற்கொள்ளுதல்

அலுவலக குறிப்பு : -1. மன்றம் அனுமதிக்கலாம் .
ந.க.எண்.      /2023/இ1.

தீர்மான எண்: 970 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :17

சிவகாசி மாநகராட்சியில் CWSS திட்டத்திற்கான கடன் தொகை ரூ.2,14,21,165/- செலுத்தக்கோரி TNUDF அலுவலகத்திலிருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது அதனை தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) தொகையை பொது நிதியிலிருந்து செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-அவசரம் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்:3114/2022/பி5

தீர்மான எண்: 971 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :18

சிவகாசி மாநகராட்சி வார்டு எண்-16 மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் படி பள்ளபட்டி ரோட்டில் மூன்று தெருக்களில் குழாய் பதிக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடுத் தொகை ரூ.1,20,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- மேற்கண்ட பணியை குடிநீர் நிதி 2023 - 2024ன் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்-      /2023/இ2

தீர்மான எண்: 972 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :19

சிவகாசி மாநகராட்சி வார்டு எண்-30 மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் படி பராசக்தி காலனி சுந்தரவேல் மேட்ச் தொழிற்சாலை அருகில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து செல்லும் குழாய் சீலைக்காரி காம்பவுட் வரை மற்றும் செட்டியார் திருமண மண்டபம் வரை குழாய் பதிக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மேற்கண்ட பணியை குடிநீர் நிதி 2023-2024ன் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்-      /2023/இ2

தீர்மான எண்: 973 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

பொருள் :20

சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதி வார்டு எண். 14 கலைமகள் பள்ளி அருகில் அமைந்துள்ள 8 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியின் படிக்கட்டுகள் முழுவதும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் மிகவும் அபாயகரமாக உள்ளது. அதற்கு பதிலாக புதிதாக Steel Lader அமைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சிமெண்ட கான்கிரிட் படிக்கட்டுகளை இடித்து அப்புறப்படுத்துவதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.50,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:7407/2023/இ3)

தீர்மான எண்: 974 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :21**

சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதி வார்டு எண். 03 அண்ணா காலனியில் கிழக்கு பகுதி பால்காரர் காம்பவுண்ட் எதிர்புறம் அமைந்துள்ள 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட HDPE Tank யை தாங்கி நிற்கும் பம்ப் ரூம் முழுவதும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்கண்ட பம்ப் ரூமை இடித்து அப்புறப்படுத்துவதற்கு ஆகும் மதிப்பீட்டுத்தொகை ரூ.20,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மாமன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:7472/2023/இ3)

தீர்மான எண்: 975 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :22**

சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதி மண்டலம் I ல் வார்டு எண்: 02 ஸ்டாண்டர்டு காலனியில் நகர்புற துணை சுகாதார நிலையம் ரூ.30.00 இலட்சம் மதிப்பட்டில் அமைப்பதற்கு (NUHM)கீழ் நிதி ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் நகர்புற துணை சுகாதார நிலையம் அமைக்கும் பணியை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மாமன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:7407/2023/இ3)

தீர்மான எண்: 976 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :23**

சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதி மண்டலம் II ல் வார்டு எண்: 04 பெரியார் காலனியில் நகர்புற துணை சுகாதார நிலையம் ரூ.30.00 இலட்சம் மதிப்பட்டில் அமைப்பதற்கு (NUHM)கீழ் நிதி ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் நகர்புற துணை சுகாதார நிலையம் அமைக்கும் பணியை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மாமன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:7407/2023/இ3)

தீர்மான எண்: 977 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :24**

சிவகாசி மாநகராட்சி வார்டு எண்-26 மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் படி நூற்றாண்டு விழா நிதியில் செங்கமலநாட்சியார்புரம் சாலையில் நகராட்சி எல்லை வரை தார்சாலை அமைத்திட தொகை ரூ.110.00 இலட்சத்திற்கு மன்ற ஒப்புதல் பெறப்பட்டும், அதற்கான ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு இம்மாமன்ற தீர்மான எண்-1161 நாள்-30.7.2021ன் படி வேலை உத்தரவு வழங்கப்பட்டது. வேலை உத்தரவில்

குறிப்பிட்ட பணிகளை ஒப்பந்ததாரர் முடித்த நிலையில் அதற்கான பட்டியல் தொகை ரூ.64,36,944 வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.45,63,056/-க்கு

1. இராக்லாந்து பள்ளிக்கு கிழக்கு புறம் உள்ள ஆயில் மில் காலனி 2வது தெரு பேவர்பிளாக் சாலை சீரமைத்தல்.
2. ஆயில் மில் காலனி 6வது தெரு பேவர்பிளாக் சாலை சீரமைத்தல்
3. கந்தபுரம் காலனி 2வது தெரு பேவர்பிளாக் சாலை சீரமைத்தல்

ஆகிய பணிகளை மதிப்பீட்டு தொகைக்கு மேற்கொள்ளவும், அதற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டில் இல்லாத இனங்களுக்கான துணை விலை விகிதம் பட்டியல் ஆகியவற்றிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- 1.மாமன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்: 1635/2023/இ1

தீர்மான எண்: 978 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :25**

சிவகாசி மாநகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டத்தின் கீழ் வார்டு எண்-37ல் சக்கரை வாவா தெரு பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கான மூலமதிப்பீட்டில் 250 மீட்டர் நீளத்தில் பேவர் பிளாக் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்கண்ட பணியில் மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் படி மழைநீர் வடிகால் நல்ல நிலையில் உள்ளதால் பழுதான சாலையை சரி செய்ய தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மதிப்பீட்டு தொகைக்கும் 856 மீட்டர் நீளத்திற்கு பேவர் பிளாக் தளம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று முடிவறிக்கை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு : -1. மன்றம் அனுமதிக்கலாம் .
ந.க.எண். 1635/2021/இ1.

தீர்மான எண்: 979 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :26**

சிவகாசி மாநகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டம் 2020-2021ன் கீழ் வார்டு எண்-41ல் ஜவுளிக் கடை வீதி மற்றும் ஏழு கோவில் தெருவில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.46.00 இலட்சம் மூலமதிப்பீட்டில் 2392 சதுரமீட்டர் நீளத்தில் பேவர் பிளாக் தளம் மற்றும் 300 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போழுது 2300 சதுரமீட்டர் அளவிற்கு பேவர்பிளாக் தளம் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியில் மீதமுள்ள தொகைக்கு மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் படி குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் தளம் பணிகள் மேற்கொள்ளவும் வேலைத்தாள் (Work Slip) தயார் செய்து உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று முடிவறிக்கை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு : -1. மன்றம் அனுமதிக்கலாம் .
ந.க.எண். 1635/2021/இ1.

தீர்மான எண்: 980 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :27**

சிவகாசி மாநகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டம் 2020-2021ன் கீழ் வார்டு எண்-41ல் நாடக சாலை தெரு, நாவெட்டி தெரு, பாவாலியன் தெருவில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கான மூலமதிப்பீட்டில் 2317.50 சதுரமீட்டர் நீளத்தில் பேவர் பிளாக் தளம் மற்றும் 515 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போழுது 1670 சதுரமீட்டர் அளவிற்கு பேவர்பிளாக் தளம் தொகை ரூ.18.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியில் மீதமுள்ள தொகைக்கு மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் படி குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் தளம் பணிகள் மேற்கொள்ளவும் வேலைத்தாள் (Work Slip) தயார் செய்து உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று முடிவறிக்கை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு : -1. மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண். 1635/2021/இ1.

தீர்மான எண்: 981 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :28**

சிவகாசி மாநகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டத்தின் கீழ் வார்டு எண்-47ல் குட்டியனஞ்சான் தெரு மற்றும் வெல்லஞ்சாமியார் தெருவில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கான மூலமதிப்பீட்டில் 2592 சதுரமீட்டர் நீளத்தில் பேவர் பிளாக் தளம் மற்றும் 648 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போழுது 2087 சதுரமீட்டர் அளவிற்கு பேவர்பிளாக் தளம் அமைக்கப்பட்டு தொகை

ரூ.27.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியில் மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் படி மழைநீர் வடிகால் நல்ல நிலையில் உள்ளதால் பழுதான சாலையை சரி செய்ய தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் பேவர் பிளாக் தளம் பணிகள் மேற்கொள்ளவும் இதற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று முடிவறிக்கை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு : -1. மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண். 1635/2021/இ1.

தீர்மான எண்: 982 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :29**

சிவகாசி மாநகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டம் 2020-2021ன் கீழ் வார்டு எண்-41ல் பி.கே.எஸ் தெரு மற்றும் பட்டி தெருவில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.41.00 இலட்சம் மூலமதிப்பீட்டில் 2148 சதுரமீட்டர் நீளத்தில் பேவர் பிளாக் தளம் மற்றும் 290 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போழுது 2100 சதுரமீட்டர் அளவிற்கு பேவர்பிளாக் தளம் தொகை ரூ.23.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியில் மீதமுள்ள தொகைக்கு மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் படி குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளவும் வேலைத்தாள் (Work Slip) தயார் செய்து உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று முடிவறிக்கை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு : -1. மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண். 1635/2021/இ1.

தீர்மான எண்: 983 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :30**

சிவகாசி மாநகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டம் 2020-2021ன் கீழ் வார்டு எண்-48ல் முண்டகன் தெரு SHNG பள்ளி பின்புறம் , அரிசி கொள்வான் தெருவில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.50.00 இலட்சம் மூலமதிப்பீட்டில் 3000 சதுரமீட்டர் நீளத்தில் பேவர் பிளாக் தளம் மற்றும் 500 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போழுது சிறுபாலம் மற்றும் 1569.18 சதுரமீட்டர் அளவிற்கு பேவர்பிளாக் தளம் தொகை ரூ.22.30 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியில் மீதமுள்ள தொகைக்கு மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் படி மழைநீர் வடிகால் முற்றிலும் இல்லாத பகுதியான காளியப்பா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளவும்

வேலைத்தாள் (Work Slip) தயார் செய்து உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று முடிவறிக்கை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது
அலுவலக குறிப்பு : -1. மன்றம் அனுமதிக்கலாம் .
ந.க.எண். 1635/2021/இ1.

தீர்மான எண்: 984 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :31**

சிவகாசி மாநகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டத்தின் கீழ் வார்டு எண்-46ல் தெய்வானை நகர் ராம்ஜி பாலிபேக் அருகில் தார்சாலை அமைக்கும் பணிக்கான மூலமதிப்பீட்டில் 5000 சதுரமீட்டர் தார்சாலையும், சாலையின் இருபுறமும் 625 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பகுதி குடியிருப்பு பகுதியாக இருப்பதால் மேற்கண்ட பகுதியின் சாலையில் ஒரு பக்கம் மட்டும் 700 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு தொகை ரூ.95.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்கான மீதமுள்ள தொகையில் ராம்ஜி பாலி பேக் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே பாலம் மற்றும் ஓடையின் மண் அரிப்பை தடுக்கும் பொருட்டு தடுப்பு சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளவும் இதற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று முடிவறிக்கை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது
அலுவலக குறிப்பு : -1. மன்றம் அனுமதிக்கலாம் .
ந.க.எண். 1635/2021/இ1.

தீர்மான எண்: 985 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :32**

சிவகாசி மாநகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டம் 2020-2021ன் கீழ் ஜே நகர், புதுகாலனி மற்றும் 66 காலனி ஆகிய இடங்களில் பூங்கா மேம்பாடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்கண்ட பூங்காக்களை விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பொருட்டு விரைவில் பணிகள் மேற்கொண்டு மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் திறப்பு விழா செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பூங்காக்களை பொலியுற செய்யம் பொருட்டு மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின் படி மூல மதிப்பீட்டில் இல்லாத கீழ்காணும் இனங்கள் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணிகள் மேற்கொள்ளவும், மேற்கண்ட பணியை விரைந்து மேற்கொள்ளும் பொருட்டு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி விபரம் | விலை விகிதம் ரூ. | குறைவான விலைப்புள்ளி அளிக்கப்பட்ட விபரம் |
|---|---|---|---|---|
| 1. | நீர் ஊற்று 10 அடி அகலம் 2” விட்டம் சில்வர் பைப் 5HP திறந்த வெளி கிணறு நீர் மூழ்கி மோட்டார் மற்றும் பைப் லைன் அமைத்து இயக்கி கொடுக்கும் பணி | ராயல் பவுண்டெய்ன் எம்போரியம், கோயம்புத்தூர் | 3,72,000/- | ராயல் பவுண்டெய்ன் எம்போரியம், கோயம்புத்தூர் |
| | | R.B இண்டர்சியஸ், கோயம்பத்தூர் | 3,96,000/- | |

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி விபரம் | விலை விகிதம் ரூ. | குறைவான விலைப்புள்ளி அளிக்கப்பட்ட விபரம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | போகன் வில்லா செடி நட்டு உரம் வைத்து கொடுக்க கூலி உள்ளபட மொத்தம் 3030 செடிகள் | பட்டர் பிளை கார்டன், காரைக்குடி | 3,63,600/- | பட்டர் பிளை கார்டன், காரைக்குடி |
| | | பாப்பாத்தி நர்சரி கார்டன், காரைக்குடி | 4,24,200/- | |

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி விபரம் | விலை விகிதம் ரூ. | குறைவான விலைப்புள்ளி அளிக்கப்பட்ட விபரம் |
|---|---|---|---|---|
| 1. | LED அக்ரிலிக் ACP சைன் போர்டுடன் 3D எழுத்துடன் கம்பம் விநியோகம் மற்றும் நிறுவும் பணி | K டெக்னாலசிஸ், மதுரை | 2,34,000/- | K டெக்னாலசிஸ், மதுரை |
| | | விஜயா டிரேடர்ஸ், சிவகாசி | 2,44,500/- | |

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி விபரம் | விலை விகிதம் ரூ. | குறைவான விலைப்புள்ளி அளிக்கப்பட்ட விபரம் |
|---|---|---|---|---|
| 1. | சுழல் சரிவு குழந்தைகள் விளையாட்டு உபகரணம் 3 எண்ணம் விநியோகம் மற்றும் பொருத்தும் பணி | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் | 2,34,000/- | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் |
| | | ஆஸ்கார் பிளே ஸ்டோர், திருநெல்வேலி | 2,76,000/- | |
| 2 | காற்று நடை விளையாட்டு உபகரணம் 3 எண்ணம் விநியோகம் மற்றும் பொருத்தும் பணி | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் | 1,08,000/- | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் |
| | | ஆஸ்கார் பிளே ஸ்டோர், திருநெல்வேலி | 1,13,700/- | |
| 3 | இரட்டை திருப்பம் விளையாட்டு உபகரணம் 2 எண்ணம் விநியோகம் மற்றும் பொருத்தும் பணி | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் | 75,600/- | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் |
| | | ஆஸ்கார் பிளே ஸ்டோர், திருநெல்வேலி | 78,800/- | |
| 4 | தோள்பட்டை அழுத்த விளையாட்டு உபகரணம் 1 எண்ணம் விநியோகம் மற்றும் பொருத்தும் பணி | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் | 42,500 | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் |
| | | ஆஸ்கார் பிளே ஸ்டோர், திருநெல்வேலி | 44,000 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | கிரானைட் கல் இருக்கை 16 எண்ணம் அமைக்கும் பணி | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் | 2,36,800 | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் |
| | | ஆஸ்கார் பிளே ஸ்டோர், திருநெல்வேலி | 2,54,400 | |
| 6 | விலங்குகள் உருவ குப்பை தொட்டி 8 எண்ணம் வினியோகம் மற்றும் நிறுவும் பணி | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் | 1,42,400 | பென்பிளே எம்போரியம், கோயம்பத்தூர் |
| | | ஆஸ்கார் பிளே ஸ்டோர், திருநெல்வேலி | 1,49,600 | |

அலுவலக குறிப்பு : -1. மேற்கண்ட பணிகளுக்கு வரபெற்ற குறைந்த விலைப்புள்ளிகளை ஏற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் .

2. மேற்கண்ட பணிகளுக்கு மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியன் படி மேல் நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1635/2021/இ1.

தீர்மான எண்: 986 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :33**

சிவகாசி மாநகராட்சி நூற்றாண்டு விழா திட்டத்தின் கீழ் ரத்தின விலாஸ் பள்ளி அருகில் பூங்கா மேம்பாடு செய்யும் பணிக்கு தென்னக இரயில்வேயிடமிருந்து தடையின்மை சான்று பெற வரப்பெற்றுள்ள கேட்பு பட்டியல் தொகை ரூ.35400/-யை தென்னக இரயில்வேக்கு செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : -1. மன்றம் அனுமதி வழங்கலாம் .

2. மேற்கண்ட தொகையை நூற்றாண்டு நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்

3. மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் படி மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1635/2023/இ1.

தீர்மான எண்: 987 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :34**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.24826/2022/SS1 நாள்.26.12.2022ல் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2022-2023ம் ஆண்டிற்கு சிவகாசி மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வேலாயுதம் ரோடு சாய்பாபா கோவில் தெரு1, வேலாயுதம் ரோடு சாய்பாபா கோவில் தெரு 11, KAMAK LAYOUT, ARR Layout -2, ARR Layout - 3 ஆகிய தெருக்களில் ரூ.158.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை எடுத்து செய்யும் பொருட்டு உரிய திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.001/2022/டிஓ1 நாள்.27.12.2022ல் உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு உரிய வழிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தபுள்ளி கோரி இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.6292/2022/இ1 நாள்.15.02.2023ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மாமன்ற உறுப்பினர் கோரிக்கையின் படி அனுமதி அளிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்குள்ளே மாற்று சாலையாக Sony Fireworks Road மற்றும் அணில் பால்ராஜ் ரோடு சாலையினை தேர்வு செய்து பணியினை மேற்கொள்ளவும் திருத்திய திட்ட மதிப்பீடு பொறியியல் பிரிவு மூலம் தயார் செய்யப்பட்ட திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அ) திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கு இப்பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) திட்டபணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருத்திய திட்ட மதிப்பீட்டின் படி பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6292/2022/இ1

தீர்மான எண்: 988 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :35**

சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதி மண்டலம் I மற்றும் II ல் 24 இடங்களில் உள்ள அனைத்து மின் இணைப்புகளும் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது . மேற்படி பயன்பாட்டில் இல்லாத மின் இணைப்புகளுக்கு குறைந்தபட்ச கட்டணம் தற்பொழுதுவரை செலுத்தப்பட்டு வருகின்றது. எனவே மேற்படி பயன்பாட்டில் இல்லாத மின் இணைப்புகளை நிரந்தரமாக துண்டிப்பு செய்யவும் , மேலும் அதற்கான நிலுவை தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மாமன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:5781/2022/இ3.

தீர்மான எண்: 989 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :36**

பார்வை: இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்:594, நாள்:31.01.2023.

பார்வையில் காணும் இம்மாமன்ற தீர்மானத்தின் படி சிவகாசி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வணிகம் மற்றும் தொழிற்சாலை பயன்பாடாக உள்ள சொத்து வரி விதிப்புகளை பொது மக்களின் மனுக்கள் குடியிருப்பு பயன்பாடாக கணினியில் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், வணிகம் மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டில் இருந்து குடியிருப்பு பயன்பாடாக மாற்றம் செய்யப்படும் போது ஏற்படும் கீழ்கண்ட பட்டியலில் உள்ள தொகையினை ஈடு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | வரிவிதிப்பு எண் | வரி விதிப்பு பெயர் மற்றும் முகவரி | தற்போது பயன்பாட்டில் உள்ள இனம் | தற்போது மாற்றப்பட வேண்டிய இனம் | முன்பு உள்ள வரித்தொகை | மாற்றம் செய்த பின்பு உள்ள வரித்தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 129/21290 | ஐ.பெனேசர் ஜோசப் ராஜ்குமார் 100, தெற்கு ரத வீதி, சிவகாசி | வணிகம் | குடியிருப்பு | 2320 | 1740 | 580 |
| 2. | 129/15779 | நஸிஹா பேகம் 155,சீதக்காதி நடுத்தெரு | வணிகம் | குடியிருப்பு | 860 | 538 | 324 |
| 3. | 129/16809 | இமாம் அலி ஜின்னா 144, ஓடைத்தெரு | வணிகம் | குடியிருப்பு | 931 | 665 | 266 |
| 4. | 129/15777 | சம்சுல் ஆரிப் 159,சீதக்காதி நடுத்தெரு | தொழிற்கூடம் | குடியிருப்பு | 525 | 375 | 150 |
| 5. | 129/11603 | ராஜேஸ்வரி 38,எஸ்.எம்.கே தெரு | வணிகம் | குடியிருப்பு | 860 | 538 | 322 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6. | 129/18518 | கே.ஜெயலட்சுமி<br>227,வடக்கு ரத வீதி | வணிகம் | குடியிருப்பு | 744 | 558 | 186 |
| 7. | 129/13066 | குணசீலன்<br>322,<br>அம்மன் கோவில்பட்டி தென்பாகம் | தொழிற்கூடம் | குடியிருப்பு | 7823 | 7823 | - |
| 8. | 129/10579 | முருகேஸ்வரி<br>1279,சோலை காலணி | தொழிற்கூடம் | குடியிருப்பு | 1026 | 733 | 293 |
| 9. | 129/9238 | மணிகண்டன்<br>1697,பெரிய கருப்பன் ரோடு | வணிகம் | குடியிருப்பு | 10728 | 9387 | 1341 |
| 10. | 129/7735 | ராமமூர்த்தி<br>1149,ஞானகிரி ரோடு | தொழிற்கூடம் | குடியிருப்பு | 1853 | 1589 | 264 |
| 11. | 129/7062 | துரைப்பாண்டி<br>596,ஞானகிரி ரோடு | வணிகம் | குடியிருப்பு | 2584 | 1615 | 969 |
| 12. | 129/7872 | சாந்தி<br>797,ஞானகிரி ரோடு | தொழிற்சாலை | குடியிருப்பு | 5129 | 5129 | - |
| 13. | 129/7686 | சங்நர நாராயணன்<br>1229,ஞானகிரி ரோடு | தொழிற்சாலை | குடியிருப்பு | 2118 | 1513 | 605 |
| 14. | 129/9582 | சந்திரமோகன்<br>358,பெரிய கருப்பன் ரோடு | தொழிற்சாலை | குடியிருப்பு | 3717 | 3186 | 531 |
| 15. | 129/11688 | சாவித்திரி<br>30,வாணக்காரர் தெரு | வணிகம் | குடியிருப்பு | 1718 | 1074 | 644 |
| 16. | 129/15269 | பவுன்ராஜன்<br>83,மீரா உசேன் தெரு | குடியிருப்பு | வணிகம் | 168 | 482 | - |
| 17. | 129/27586 | சித்ரா தேவி<br>191,பட்டி தெரு | வணிகம் | குடியிருப்பு | 2904 | 2178 | 726 |
| 18. | 129/15928 | ஏசுதாஸ்<br>110,சீதக்காதி தைக்கா தெரு | வணிகம் | குடியிருப்பு | 10948 | 10948 | - |
| 19. | 129/18441 | முத்துலட்சுமி<br>174,மேலரதவீதி | வணிகம் | குடியிருப்பு | 3488 | 2180 | 1308 |
| 20. | 129/4727 | ஆறுமுகம் லட்சுமி<br>1569,ஜவஹர்லால் நேரு ரோடு | தொழிற்சாலை | குடியிருப்பு | 2111 | 1508 | 270 |
| 21. | 129/20001 | குணசீலன்<br>116,தங்கையா ரோடு | வணிகம் | குடியிருப்பு | 720 | 450 | 270 |
| 22. | 129/31091 | குருசாமி<br>292,சேர்மன் ஏ.எஸ்.கே.தங்கையா ரோடு | வணிகம் | குடியிருப்பு | 919 | 656 | 263 |
| 24. | 129/20564 | அசோக் பிரபு<br>84,புதுரோட்டுத்தெரு | வணிகம் | குடியிருப்பு | 2512 | 1884 | 628 |
| 25. | 129/27545 | சு.சண்முகராஜன்<br>த/பெ.சுப்பிரமணியன்,<br>18,பட்டித்தெரு, | தொழிற்சாலை | குடியிருப்பு | 2456 | 2436 | 20 |
| 26. | 129/5958 | கேசவன்,<br>104,கருப்பணன் தெரு, | தொழிற்சாலை | குடியிரு ப்பு | 1183 | 845 | 338 |
| 27. | 129/7722 | தினேஷ்,<br>1097,ஞானகிரி ரோடு | வணிகம் | குடியிருப்பு | 772 | 483 | 289 |
| 28. | 129/11710 | ராஜேஸ்வரி,<br>39,வாணக்காரர் தெரு | தொழிற்சாலை | குடியிருப்பு | 1234 | 1058 | 176 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 29. | 129/25169 | சுபாஷ் சந்திர போஸ், 37,அனந்தப்பன் தெரு | தொழிற்சாலை | குடியிருப்பு | 690 | 493 | 197 |
| 30. | 129/32772 | புஷ்பம், 123 சி1,காமராசர் ரோடு | வணிகம் | குடியிருப்பு | 724 | 453 | 271 |
| 31. | 129/20807 | முனியாண்டி, 71,மாத்திதெரு | தொழிற்சாலை | குடியிருப்பு | 3756 | 3219 | 537 |
| 32. | 129/27697 | பழனிச்சாமி, 14,எஸ்.கே. தெரு | தொழிற்சாலை | குடியிருப்பு | 1041 | 744 | 297 |
| 34. | 129/27103 | வி.சி.என். சேகர், 103-எ ஜவுளிக்கடைத்தெரு | தொழிற்சாலை | குடியிருப்பு | 4204 | 3003 | 1201 |
| 35. | 129/27545 | சண்முகராஜன், 18,பட்டித்தெரு | தொழிற்சாலை | குடியிருப்பு | 2436 | 2436 | - |
| 36. | 129/15878 | ஜெ.முகம்மது பாருக் 41,சீதக்காதி தைக்கா தெரு | தொழிற்சாலை | குடியிருப்பு | 8631 | 8631 | - |
| 37. | 129/7616<br>129/7617<br>129/7618<br>129/7619 | நாகமணி, மங்களேஸ்வரி 1471, ஞானகிரி ரோடு, சிவகாசி | வணிகம் | குடியிருப்பு | 1040<br>1040<br>1040<br>1288 | 650<br>650<br>650<br>805 | 390<br>390<br>390<br>483 |
| 38. | 129/16281 | அசரப் அலி | வணிகம் | குடியிருப்பு | 1278 | 1095 | 183 |
| 40. | 129/11648 | எ.செந்தில் குமார் | வணிகம் | குடியிருப்பு | 2576 | 1610 | 966 |
| 41. | 129/9238 | சங்கரரேஸ்வரி கார்டியன் மைனர் | வணிகம் | குடியிருப்பு | 10728 | 9387 | 1341 |

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் மற்றும் வித்தியாச தொகையினை ஈடுசெய்யலாம்.

ந.க.எண்:4959/2021/பி2

தீர்மான எண்: 990 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :37**

சிவகாசி மாநகராட்சி வார்டு எண்: 34 கதவு எண்-231 தெருவின் பெயர்: பி.கே.எஸ்.எ.ஆறுமுகம் ரோடு என்ற முகவரியில் உள்ள சொத்து வரி விதிப்பு எண்: 129/10712-உள்ள கட்டிடம் ரோமன் கத்தோலிக் சர்ச் என்ற பெயரில் உள்ளது. மேற்படி அக்கட்டிடம் மாணவர்களிடம் இருந்து எந்தவொரு நன்கொடையும் கல்வி கட்டணமும் இல்லாமல் நடைபெற்று வருகிறது. மேற்படி இடத்தை வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் நேரில் சென்று ஆய்வு செய்து அதற்கான ஆவணங்கள் அனைத்தும் தயார் செய்யப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தற்போது, குழந்தைகள் நலன் கருதி படிப்புக்காக கூடுதல் இடம் தேவைப்பட்ட காரணத்தால் வாடகைக்கு விடப்பட்ட கட்டிடத்தை காலி செய்து கல்வி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. ஆகவே, வரி விதிப்பு எண்: 129/10712-ஐ 01.04.2023- முதல் ரத்து செய்தும் வரி விலக்கு அளிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1.மாமன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்: 5829/2023/அ1

தீர்மான எண்: 991 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :38**

நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் 145 நாள் 14.10.2022-ல் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகளை ஆற்றல்மிகு(LED)தெருவிளக்குகளாக மாற்றுவதற்கு உரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.அதன் பொருட்டு சிவகாசி மாநகராட்சி பகுதியில் உள்ள 4423

தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.536.00 இலட்சம் மதீப்பீட்டில் உரிய திட்ட கருத்துருவிணை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.மேலும் இத்திட்டத்திணை செயல்படுத்துவதற்கு அதற்கான நிதி ஆதாரத்தினை TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடனாக பெற்றுக்கொள்ளவும் அக்கடன் தொகையினை 6 ஆண்டுகளில் 5% வட்டி தொகையுடன் திரும்ப செலுத்திடவும் அரசாணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி சிவகாசி மாநகராட்சி பகுதியில் உள்ள 4423 தெருவிளக்குகளை ஆற்றல்மிகு LED விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.536.00 இலட்சம் மதீப்பீட்டில் உரிய திட்ட கருத்துருவிணை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு :**

1. சிவகாசி மாநகராட்சி பகுதியில் உள்ள 4423 தெருவிளக்குகளை ஆற்றல்மிகு LED விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.536.00 இலட்சம் மதீப்பீட்டில் உரிய திட்ட கருத்துருவிணை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம் .

2. மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடனாக பெற்றுக்கொள்ளவும் அக்கடன் தொகையினை 6 ஆண்டுகளில் 5% வட்டி தொகையுடன் திரும்ப செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

3. திட்டபணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய திட்ட கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்தமைக்கு மாமன்றம் அனுமதித்து அங்கிகரிக்கலாம்.

ந.க.எண் : 11384 /2023/இ2

தீர்மான எண்: 992 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் :39**

சிவகாசி மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN95C 2353 ஈப்பு வாகனம் 2019 -ம் ஆண்டு வாங்கப்பட்டு 5 வருடங்களாக அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 190000 கீ.மீட்டர் இயக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு ஓட்டுநர் குறிப்பின் படி பழுதுபணிகள் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.85616/-க்கு ( எண்பத்து ஐந்தாயிரத்து அறுநூற்று பதினாறு மட்டும்)குடிநீர் நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள தயாரிப்பு நிறுவனமான மதுரை, கப்பலூர் Automotive Manufacturers Pvt Ltd நிறுவனம் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.7592/2023/இ4**

தீர்மான எண்: 993 நாள்: 29.09.2023 (அனுமதிக்கப்பட்டது)